


ஆன்மிக சிகரத்தின்

# நம்ம ஊரு நியூஸ்

RNI No: TNTAM/2017/75122




Editor: V.S.N.Sharma | Chief Reporter : S.Esakki | Chennai : 9710755689 | 9962505384 | 6 பக்கம் | 8.3.2026 ஞாயிற்றுக்கிழமை ★★

## மகளிருக்கான மாதம் ரூ.2.500, திருமணத்துக்கு ஒரு பவுன், அண்ணன் சீர் முதல்

# தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்

## தவெக தலைவர் விஜய்யின் வாக்குறுதி

சென்னை, மார்ச்.8: தமிழகத்தில் தவெக ஆட்சி அமைந்தவுடன் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.2500 வழங்கப்படும், பெண்களின் திருமணத்துக்கு ஒரு பவுன் தங்கம், அனைத்துப் பேருந்துகளிலும் பெண்களுக்கு இலவசப் பயணம் உள்ளிட்டவை செயல்படுத்தப்படும் என தவெக தலை வர் விஜய் தேர்தல் வாக்குறுதிகளாக அறிவித்துள்ளார்.

சென்னையில் தவெக சார்பில் கொண்டாடப் பட்ட மகளிர் தின விழாவில் அக்கட்சியின் தலைவர் விஜய் வெளியிட்ட வாக்குறுதிகள் விவரம்:

“பெண்கள், குழந்தைகள், முதியோர் நலனில் அக்கறை செலுத்துவதே தவெகவின் அடிப்படை முக்கிய நிலைப்பாடு. அதன்படி அதற்கென தனி இலாகா ஏற்படுத்தப்படும். அந்த இலாகா எனது நேரடி கட்டுப்பாட்டில் இருக்கும். மாதம் ரூ.2,500: தமிழகத்தை இந்தியாவின் நம்பர் 1 மாநிலம் என தம் பட்டம் அடிக்கும் திமுக அரசு, மகளிர் உரிமைத் தொகையாக வெறும் ஆயிரம் ரூபாய் மட்டும் வழங்குகிறது. எனவே, தவெக அரசில் 60 வயது வரை உள்ள அனைத்து குடும்பத் தலைவிகளுக்கும் மாதம் ரூ.2,500 வழங்கப்படும். இதில் மாநில, ஒன்றிய அரசின் ஊழியர்களாக இருக்கும் குடும்பங்களுக்கு மட்டும் விதிவிலக்கு.

‘அன்னபூரணி சூப்பர் சிக்ஸ்’ திட்டத்தின் கீழ், ஒவ்வொரு குடும்பத்துக்கும் வருடத்துக்கு 6 கேஸ் சிலிண்டர்கள் கட்டணமின்றி வழங்கப்படும். இது தாய்மார்கள் வயிற்றில் பால் வார்க்கும் திட்டமாக இருக்கும்.



அண்ணன் சீர் திட்டம் மூலம், பெண்களின் திருமணத்துக்கு ஒரு பவுன் தங்கம், தரமான பட்டு சேலையும் அளிக்கப்படும்.

ரூ.15 ஆயிரம் உதவி: காமராஜர் கல்வி உறுதி திட்டத்தின் கீழ், 1 முதல் 12-ஆம் வகுப்பு வரை இடைநிற்றலே இல்லாமல் குழந்தைகள் கல்வி கற்க, அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு ரூ.15 ஆயிரம் பொருளாதார உதவி வழங்கப்படும்.

இப்போது பிங்க் நிற பேருந்துகளில் மட்டும் பெண்களுக்கு இலவச பயணத்திட்டம் உள்ளது. தவெக அரசு அமைந்தால் வெற்றிப் பயணம் திட்டத்தின்படி, அரசுப் போக்குவரத்து கழகத்தின் அனைத்துப் பேருந்துகளிலும் பெண்கள் இலவசமாக பயணிக்கலாம்.

பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்ய ராணி வேலு நாச்சியார் படை அமைக்கப்படும். சாதாரண உடையில் 500 படைகள் மாநிலம் முழுவதும் கண்காணிப்பில் இருப்பார்கள். பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளை விசாரித்து விரைவாக நீதி வழங்க அஞ்சலையம்மாள் விரைவு நீதிமன்றங்கள் அமைக் கப்படும். பொது போக்கு வரத்து வாகனங்களில் பயணிக்கும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய எச்சரிக்கை பொத்தான்கள் அமைக்கப் படும்.

சிசிடிவி கேமராக்கள் இல்லாத இடமே இல்லை என்ற வகையில் ஜீரோ டார்க் ஸ்பாட்டுகள் அமைக் கப்படும். பொதுவிநியோக கடைகள், பள்ளிகள், கல்லூரிகள் விலையில்லா சானிடரி நாப்கின்கள் வழங்கப்படும். சிங்கப் பெண்கள் மேம்பாட்டுத் திட்டம் மூலம் நிலுவையிலுள்ள கடன்களை திரும்ப செலுத்துவதன் மூலமும், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.5 லட்சம் வரை வட்டியில்லா கடன் வழங் கப்படும். இவர்கள் தொழில் தொடங்கினால் 5 லட்சம் ரூபாய் 100% மானியத்தில் வழங்கப்படும்.

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் மூலம், தமிழகத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம், குழந்தைகளுக்கான வரவேற்பு கிட் வழங்கப்படும்” என்பன உள்ளிட்ட வாக்குறுதிகளை விஜய் வெளியிட்டார்.







பழைய டிரஸ்ட்
(Trust)
தேவைப்படுவோர்
தொடர்புக்கு:
99 44 616 559

## கோவையில் கல்லூரி மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில்

# கைதான மூவருக்கும் சாகும் வரை சிறை தண்டனை

கோவை, மார்ச்.8: கோவையில் கல்லூரி மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் கைதான மூவருக்கும் சாகும் வரை சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

கோவை பீளமேடு விமான நிலையம் அருகே, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 2-ம் தேதி இரவு, கோவையைச் சேர்ந்த கல்லூரி மாணவி, ஆண் நண்பருடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த 3 நபர்கள், ஆண் நண்பரை தாக்கிவிட்டு, கல்லூரி மாணவியை கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்தனர். இந்த வழக்கு தொடர்பாக கருப்பசாமி, அவருடைய தம்பி காளீஸ்வரன் மற்றும் தவசி ஆகிய 3 பேரை மறு நாள் போலீஸார் துப்பாக்கியால் சுட்டுப்பிடித்தனர்.





இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை, கோவை அனைத்து மகளிர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு தொடர்பாக முதல் கட்டமாக 50 பக்கமும், 2-வது கட்டமாக 220 பக்கமும் என மொத்தம் 270 பக்க குற்றப் பத்திரிகை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

நீதிபதி சுந்தர்ராஜ் முன்னிலையில் நடந்து வரும் இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட மாணவி, அவருடைய ஆண் நண்பர், உறவினர்கள், விசாரணை நடத்திய அதிகாரிகள் என 112 சாட்சிகள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டனர். 72 பேர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்தனர்.

சென்னையில் உள்ள தடயவியல் மற்றும் டி.என்.ஏ. பரிசோதனை அதிகாரிகள் காணொலி காட்சி மூலம் சாட்சியம் அளித்தனர். குற்றச் சம்பவம் நடந்து கடந்த 4 மாதங்களாக துரித விசாரணை நடைபெற்றது. குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் குற்றச்சாட்டு குறித்து நீதிபதி சுந்தர்ராஜ் கேள்வி கேட்டார்.

அரசு தரப்பு வழக்கறிஞர் பி.ஜிஷாவும் குற்றச்சாட்டுகள் குறித்து வாதிட்டார். இதைத் தொடர்ந்து எதிர்தரப்பு வழக்கறிஞர் ஒரு மணி நேரம் ஆஜராகி வாதாடினார். அவரது வாதத்துக்கு அரசு தரப்பு வழக்கறிஞர் பதில் வாதம் செய்தார்.

இதைத் தொடர்ந்து, இந்த வழக்கின் விசாரணை கடந்த மாதம் முடிந்தது. இதையடுத்து, இந்த வழக்கில் மார்ச் 7-ம் தேதி தீர்ப்பு கூறப்படும் என்று நீதிபதி சுந்தர்ராஜன் அறிவித்தார்.

அதன்படி கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள மகளிர் நீதிமன்றத்துக்கு குற்றச்சாட்டுக்குள்ள என மூவரும் பலத்த போலீஸ் பாதுகாப்பு அளித்துவரப்பட்டு இன்று (மார்ச் 7) ஆஜர்படுத்தப்பட்டனர். இந்த மூவர் மீதான குற்றச்சாட்டுகளை உறுதிபடுத்திய நீதிபதி சுந்தரராஜன், மூவருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு அளித்தார்.




## விவாகரத்து வழக்கு முடியும் வரை நீலாங்கரையில் உள்ள தனது

# கணவர் விஜய்யின் வீட்டில் தங்கியிருக்க அனுமதிக்கக் கோரி சங்கீதா மனு தாக்கல்

செங்கல்பட்டு, மார்ச்.8: விவாகரத்து வழக்கு முடியும் வரை நீலாங்கரையில் உள்ள தனது கணவர் விஜய்யின் வீட்டில் தங்கியிருக்க அனுமதிக்கக் கோரி சங்கீதா, செங்கல்பட்டு நீதிமன்றத்தில் கூடுதல் மனு தாக்கல் செய்துள்ளார்.



நடிகரும், தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் தலைவருமான விஜய்யிடமிருந்து தனக்கு விவாகரத்து வழங்கக் கோரி, லண்டன் பிரஜையான அவரது மனைவி சங்கீதா(48) செங்கல்பட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அதில், தங்கள் குடும்ப வாழ்க்கையில் ஒரு நடிகையின் குறுக்கீடு காரணமாக விவாகரத்து வரை சென்று விட்டதாக குறிப்பிட்டிருந்தார். அந்த வழக்கு ஏப்.20-ம் தேதி விசாரணைக்கு வரவுள்ளது.

இந்த விவகாரம் அரசியல் வட்டாரத்திலும், சமூக வலைதளங்களிலும் பேசுபொருளாக மாறியது. இந்நிலையில், சென்னையில் சில தினங்களுக்கு முன்பு நடைபெற்ற திருமண நிகழ்வில் சம்பந்தப்பட்ட நடிகையுடன் விஜய் ஜோடியாக பங்கேற்றது சமூக வலைதளங்களில் மீண்டும் வைரலானது.

இதற்கிடையே, செங்கல்பட்டு நீதிமன்றத்தில் சங்கீதா புதிதாக மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். அதில், ‘‘எனது கணவர் நடிகர் விஜய்யை திருமணம் செய்த பிறகு ஆரம்பத்தில் குடும்பத்துடன் சாலிகிராமத்தில் வசித்தோம். அதன்பிறகு அடையாறில் உள்ள கஸ்தூரிபா நகரிலும், நீலாங்கரை கபாலீஸ்வர் நகரில் காஸரினா டிரைவிலும் வசித்து வந்தோம். 26 ஆண்டுகால மணவாழ்க்கையில் ஒரு மனைவியாக அவருக்கு நான் எந்தக் குறையும் வைத்தது இல்லை.

அதேபோல விஜய்யும், எனக்கோ, எனது 2 குழந்தைகளுக்கோ எந்தக் குறையும் இல்லாமல் பார்த்துக் கொண்டார். ஆனால் கடந்த 2021-ம் ஆண்டுக்குப் பிறகு அவரது போக்கில் மாற்றம் ஏற்பட்டது. இருவரும் பரஸ்பரமாக பிரிந்து செல்ல நான் எடுத்த முயற்சிகளும் பலன் அளிக்கவில்லை. ஏற்கெனவே தனக்கு எதிராக விவாகரத்து கோரி நீதிமன்றம் சென்றால் வீட்டில் இருக்க அனுமதிக்க முடியாது என விஜய் தரப்பில் அவரது வழக்கறிஞர் தெரிவித்தார்.

அதன்படி தற்போது விவாகரத்து வழக்கு தொடர்ந்துள்ளதால் என்னை நீலாங்கரையில் உள்ள அவரது வீட்டுக்குள் செல்ல அனுமதி மறுக்கப்படக் கூடும். லண்டன் பிரஜையான எனக்கு சென்னையில் வேறு எங்கும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

விவாகரத்து பெறும்வரை எனது கணவர் வீட்டில் வசிக்க எனக்கு அனைத்து உரிமைகளும் உள்ளது. எனவே நான் தொடர்ந்துள்ள விவாகரத்து வழக்கு முடிவுக்கு வரும்வரை நீலாங்கரையில் உள்ள எனது வீட்டில் தொடர்ந்து வசிக்கும் வகையில் என்னை அனுமதிக்க கணவரான விஜய்க்கு உத்தரவிட வேண்டும். அல்லது அதற்கு இணையான வசிப்பிடத்தை ஏற்பாடு செய்து கொடுக்க விஜய்க்கு இடைக்காலமாக உத்தரவிட வேண்டும். இந்த மனுவையும் பிரதான மனுவுடன் சேர்த்து விசாரிக்க வேண்டும்’’ என கோரியுள்ளார்.

அதர்மத்தை அகற்றிட! ஒன்றுபடுவோம்!! வென்றுவருவோம்!!!
ஸ்ரீ பைரவ சேனைகள் அறக்கட்டளை
கோவிலம்பாக்கம், சென்னை - 600 129.
கௌரவத் தலைவர்கள்
T.நடராஜன் K.முருகேசன் A.V.செந்தில் ராஜன் M.நாராயணன் A.சக்திவேல்
தலைவர் P.ராமகிருஷ்ணன் 9444317157
செயலாளர் T.ரவிசந்திரன் 9940536827
பொருளாளர் S.அருண்குமார் 9994641239
துணை தலைவர் நாஞ்சில் C.மனோகரன்
துணை செயலாளர் T.சுயம்புலிங்கம்
துணை செயலாளர் R.V.கணேசன்
ஆலோசகர்கள்
குலசை A.சிதம்பரம் காமதேனு G.சுந்தர் சிங்
மக்கள் தொடர்பு
தசரா நாயகி M.ஆனந்த், இசக்கி சுடலை
இளைஞர் அணி ஒருங்கிணைப்பாளர்கள்
T.ஏழுமலை



# தூத்துக்குடியில் ரூ.110.66 கோடி நலத்திட்ட உதவிகள்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

தூத்துக்குடி, மார்ச்.8: தூத்துக்குடியில் 3,958 பயனாளிகளுக்கு ரூ.110.66 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (07.03.2026) தூத்துக்குடி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு, முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

விழாவில் பேசிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், "தொழில் வளர்ச்சியில் சென்னையுடன் போட்டி போடும் அளவிற்குத் தூத்துக்குடி மிகப்பெரிய அளவில் வளர்ச்சி பெற்றுள்ளது. இந்த வளர்ச்சிக்குக் காரணம் உங்களுடைய உழைப்பும் ஒற்றுமையும் தான். இன்று தமிழ்நாடு மிகப்பெரிய அளவில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்றால் அதற்கு மகளிர்தான் காரணம்.

தமிழக முதல்வரின் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும் ஏராளமான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கியுள்ளோம். தேர்தலைக் காரணம் காட்டி சிலர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை முடக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இந்தியாவே வியக்கும் வண்ணம் மகளிர் வங்கிக் கணக்கில் (தொகையைச்) செலுத்தியவர் முதல்வர். இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

பட்டா வழங்கும் நடைமுறை எளிமையாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் மீனவ கிராமங்கள் மற்றும் கடற்கரைப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியுள்ளார். மீன்பிடி தடைக் காலத்திற்கான நிவாரணத் தொகையை ஐந்தாயிரத்திலிருந்து எட்டாயிரம் ரூபாயாக உயர்த்தியுள்ளோம். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மக்களுக்குமான 'ஆல்ரவுண்டர்' ஆட்சியாக நமது திராவிட மாடல் ஆட்சி உள்ளது" என்றார்.

விழாவில், சுமார் ரூ.177.70 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் ரூ.136.35 கோடியில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடம். ரூ.38.53 கோடியில் கட்டப்பட்ட மகப்பேறு, குழந்தைகள் நலப்பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஆகிய 4 முக்கியத் திட்டப்பணிகளைத் துணை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

மேலும், எட்டயபுரம் பாரதியார் நினைவு அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் படர்ந்தபுளி அரசு உயர்நிலைப்பள்ளியில் தலா ரூ.1.41 கோடியில் கட்டப்பட்ட புதிய வகுப்பறைகளை திறந்து வைத்தார். தூத்துக்குடி மாவட்ட விளையாட்டு வளாகத்தைப் புனரமைக்க ரூ.4 கோடி மதிப்பிலான பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

1,755 பேருக்கு ரூ.40.09 கோடியில் கணினி இ-பட்டாக்கள், 1,800 பயனாளிகளுக்கு ரூ.63 கோடியில் வீடு கட்டும் ஆணைகள், சர்வதேச வீராங்கனை முத்து மீனாவிற்கு ரூ.12 லட்சம் ஊக்கத்தொகை மற்றும் 15 வீரர்களுக்கு மருத்துவக் காப்பீடு, 51 பேருக்கு ரூ.53.58 லட்சம் மதிப்பிலான இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடன் மற்றும் தையல் இயந்திரங்கள் என மொத்தம் 3,958 பயனாளிகளுக்கு ரூ.110.66 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பி. கீதா ஜீவன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி. சண்முகையா, ஜி.வி. மார்க்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் க. இளம்பகவத், மேயர் பெ. ஜெகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.




# ஆழ்வார்திருநகரி கோயில் மாசித் திருவிழா தேரோட்டம்

## திரளான பக்தர்கள் பங்கேற்பு!

ஆழ்வார்திருநகரி, மார்ச்.8: ஆழ்வார்திருநகரி ஆதிநாதர் ஆழ்வார் கோயிலில் மாசித் திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு 'கோவிந்தா கோவிந்தா' முழக்கத்துடன் தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார்திருநகரி ஆதிநாதர் ஆழ்வார் கோயிலில் இந்த ஆண்டிற்கான மாசித் திருவிழா கடந்த பிப்ரவரி 26ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா நாட்களில் சுவாமி பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டத்தை முன்னிட்டு, வெள்ளிக்கிழமை அதிகாலை கோயில் நடை திறக்கப்பட்டது.

தொடர்ந்து விஸ்வரூபம் மற்றும் திருமஞ்சனம், நித்தியல் கோஷ்டி வழிபாடுகள் நடைபெற்றன: காலை 7 மணிக்கு, மீன லக்னத்தில் சுவாமி நம்மாழ்வார் சிறப்பு அலங்காரங்களுடன் திருத்தேரில் எழுந்தருளினார். அதனைத் தொடர்ந்து கூடியிருந்த திரளான பக்தர்கள் பக்திப் பெருக்குடன் தேரை வடம் பிடித்து இழுத்தனர். தேரானது நான்கு ரத வீதிகளிலும் வலம் வந்து நிலை சேர்ந்தது.

இந்நிகழ்வில் எம்பெருமானார் ஜீயர் சுவாமிகள், கோயில் செயல் அலுவலர் சதீஷ், ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் கோயில் ஸ்தலத்தார் ராஜப்பா வெங்கடாச்சாரி, முன்னாள் பேரூராட்சித் தலைவர் ஆதிநாதன், திமுக நகரச் செயலாளர் கோபிநாத், அதிமுக நகரச் செயலாளர் செந்தில் ராஜகுமார் உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்களும், ஆயிரக்கணக்கான பொதுமக்களும் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# குழந்தைகளுக்கு ஆசி வழங்கல்



ஸ்ரீஅய்யனார் ஆதீனம் குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஹரிஹரஸ்ரீ ஸ்ரீனிவாசசுவாமிகளிடம் குழந்தைகள் ஆசி பெற்றபோது எடுத்தபடம்.








### இசுலாமிய சனநாயக பேரவை மாவட்ட பேரவை அமைப்பாளர் சையத் அலி ஏற்பாட்டில்

# ஒருங்கிணைக்கப்பட்ட சமூக நல்லிணக்க இஃப்தார் நோம்பு திறக்கும் நிகழ்ச்சி

பெரம்பலூர், மார்ச்.8: பெரம்பலூர்.விடு தலைச் சிறுத்தைகள் கட்சியின் இசுலாமிய சனநாயக பேரவை மாவட்ட பேரவை அமைப்பாளர் சையத் அலி ஏற்பாட்டில் ஒருங்கிணைக் கப்பட்ட சமூக நல்லிணக்க இஃப்தார் நோம்பு திறக்கும் நிகழ்ச்சி கட்சியின் மாவட்டச் செயலாளர் ந.கிருஷ்ணகுமார் அவர்களின் தலைமையில் நடந்தது.



இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக மாநில செயலாளர் இசையமுதன், மண்டல துணைச் செயலாளர், மன்னர்மன்னன் கட்சியின் மாவட்ட பொருளாளர் பிச்சைபிள்ளை மாவட்ட துணைச் செயலாளர்கள் வெற்றியழகன், இடி முழக்கம், அய்யாக்கண்ணு, நிர்வாக குழு உறுப்பினர்கள் எஸ்.பி பாலு, பாக்கியராஜ், இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை மாவட்ட செயலாளர் கரு.அய்யம்பெருமாள், மாநில துணைச் செயலாளர்கள் தமிழ் கனல் (இ.ச.பே), அம்பேத் கோகுல் (மு.மா.க) ஒன்றிய செயலாளர்கள் வடிவேல் பழனி முத்து, இராதகிருஷ்ணன், மாஸ் மணி, கவியரசன், மாவட்ட அமைப்பாளர்கள் ராமர், பழனிவேல் ராஜன், சையது அலி, சக்தி பாலன், வடிவேல், சோழன், மும்மூர்த்தி, ராஜ்குமார், முத்துச் செல்வன், பாலசுப்பிரமணியம், இஸ்லாமிய பேரவை துணை தலைவர்கள் சித்திக், அப்துல் அஜீத், அசேன் முகமது, நடராஜ், கோவிந்தராஜ், திருநாவுக்கரசு, கார்த்திகேயன், பெரியசாமி, சிவப்பிரகாசம், அறிவு, அசோக், தேவேந்திரன், கிருஷ்ணன், பசும்பலூர் திமுக இளைஞரணி கிளை செயலாளர் காளி.வெங்கடேசன், பிரசாந் மற்றும் கட்சியின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



### பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் ஒன்றியம்

# கொளக்காநத்தம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முப்பெரும் விழா

பெரம்பலூர், மார்ச்.8: பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் ஒன்றியம் கொளக்காநத்தம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இலக்கிய மன்ற விழா, விளையாட்டு விழா, கல்லூரியின் முதலாம் ஆண்டு விழா உள்ளிட்ட முப்பெரும் விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.



இவ்விழாவிற்கு டாக்டர், பேராசிரியர் கண்ணதாசன் தலைமை ஏற்று நடத்தினார். முன்னாள் ஆலத்தூர் ஒன்றிய தலைவர் என்.கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ராக வன் ஆகியோர் சிறப்பு விருந் தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இந்த விழாவில் முன்னாள் ஒன்றிய தலைவர் கிருஷ்ணமூர்த்தி பேசுகையில், தமிழகத்தில் உள்ள கிராமப்புறங்களில் உள்ள அனைத்து ஏழை, எளிய மாணவ, மாணவிகள் உயர் கல்வி பயில வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு இந்த கொளக்காநத்தம் கிராமத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை நகராட்சி துறை அமைச்சர் நேரு, உயர்கல்வி துறை அமைச்சர் செழியன், போக்குவரத்து மற்றும் மின்சார துறை அமைச்சர் சிவசங்கர் ஆகியோரின் மூலமாக தமிழக முதல்வரின் கவனத்திற்கு எடுத்து சென்று கொளக்காநத்தம் கிராமத்தை சுற்றியுள்ள மாணவ, மாணவிகள் உயர்கல்வி படிப்பதற்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நான் நன்றி கூறுகிறேன்.

இக்கல்லூரியில் ஆங்கில வழிபாடப்பிரிவாக உயர் தொழில் நுட்பவியல், கணினி அறிவியல், வணிகவியல் ஆகிய பாடப்பிரிவுகளும், தமிழ் வழியில் பொருளாதாரம், அரசியல் அறிவியல் உள்ளிட்ட இளநிலை பாடப்பிரிவுகளை உள்ளடக்கி மாணவ, மாணவிகள் படித்து வருவது மிக்க மகிழ்ச்சியாக உள்ளது என பேசினார்.

இறுதியாக கல்லூரியின் பேராசிரியர் நன்றியுரையாற்றினார். இவ்விழா ஏற்பாட்டினை கல்லூரி பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் செய்திருந்தனர்.




## சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்ட காவல்துறையில் பணிபுரியும்

# மகளிர் அனைவரும் மகளிர் தின நிகழ்ச்சியை இனிப்பு வழங்கி கொண்டாட்டம்





சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்ட காவல்துறையில் பணிபுரியும் மகளிர் அனைவரும் மகளிர் தின நிகழ்ச்சியை இனிப்பு வழங்கி கொண்டாடி மகிழ்ந்தனர். சர்வதேச மகளிர் தினம் ஒவ்வொரு வருடமும் மார்ச் – 08 -ம் தேதி கொண்டாடப்பட்டுவருகின்றது. இந்நிலையில் இன்று 07.03.2026 -ம் தேதி சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெரம்பலூரில் உள்ள தனியார் மஹாலில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் G.S.அனிதா அவர்களின் தலைமையில் மாவட்ட காவல்துறையில் பணிபுரியும் மகளிர் மற்றும் அமைச்சுப்பணியாளர்கள் அனைவருக்கும் தனது மகளிர் தின வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டார். பின்னர் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைத்து மகளிருடனும் கேக் வெட்டியும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடி மகிழ்ந்தனர்.






சட்டமன்ற பொதுத்தேர்தல் – 2026 ஐ முன்னிட்டு தேர்தல் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறை, பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழு, வீடியோ கண்காணிப்புக் குழு மற்றும் வீடியோ குழுக்களில் நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கான பயிற்சிக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

## பெரம்பலூர் மாவட்டம் சட்டமன்ற பொதுத்தேர்தல் – 2026 ஐ முன்னிட்டு

# தேர்தல் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கான பயிற்சிக்கூட்டம் கலெக்டர் ந.மிருணாளினி தலைமையில் நடைபெற்றது

பெரம்பலூர், மார்ச்.8: பெரம்பலூர் மாவட்டம் சட்டமன்ற பொதுத்தேர்தல் – 2026 ஐ முன்னிட்டு தேர்தல் பணிகளுக்காக நியமிக்கப் பட்டுள்ள கட்டுப்பாட்டு அறை (Control Room), பறக் கும் படை (FST), நிலையான கண்காணிப்புக் குழு (SST), வீடியோ கண்காணிப்புக் குழு (VST) மற்றும் வீடியோ குழுக்களில் (VVT) நியமிக்கப் பட்டுள்ள அலுவலர்களுக் கான பயிற்சிக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி இ,ஆ.ப., அவர்கள் தலைமையில் நேற்று (07.03.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

கட்டுப்பாட்டு அறை, பறக்கும் படை,நிலையான கண்காணிப்பு குழுக்களில் இடம்பெற்றுள்ள அலு வலர்கள், வீடியோ கண் காணிப்பு குழு,ஊடக கண் காணிப்பு மற்றும் சான்ற ளிப்பு குழுக்களின் ஒருங் கிணைப்பு அலுவலர்களுக்கு என்னென்ன பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது என்றும் எவ்வாறு தேர்தல் பணிகளை அவர் கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் அலுவலர்கள் பயிற்சி அளித்தார்கள்.

தேர்தல் நடத்தை விதி முறைகள் அமலுக்கு வந்தவு டன் அலுவலர்கள் தங் களுக்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ள பணிகளில் முழு மையான அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்ற வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் அனை வருக்கும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் க.கண் ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் சக்திவேல், வருவாய் கோட்டாட்சியர் மு.அனிதா மற்றும் மண்டல அலுவலர்கள், தேர்தல் பிரிவு வட்டாட்சியர் அரு ளானந்தம், வருவாய் வட் டாட்சியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்.



## நாளை திருச்சியில் திமுக மாநாடு;

# முக்கிய அறிவிப்புகளை வெளியிடுகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

### லட்சக்கணக்கான தொண்டர்கள் கூடுகின்றனர்



திருச்சி, மார்ச்.8: திருச்சி சிறுகனூரில் நாளை (9ம் தேதி) திமுகவின் பிரமாண்ட 12வது மாநில மாநாடு நடைபெற உள்ளது. மாநாடு என்றாலே திமுக தான் என்பதை நிரூபிக்கும் வகையில் கடந்த காலங்களில் திமுக மாநாடுகள் நடந்துள்ளன. திமுக மாநில மாநாடுகளின் வரலாறும், அவற்றின் அரசியல் தாக்கமும் எப்போதும் கவனத்தை பெற்று வந்துள்ளன. இந்த மாநில மாநாடுகள், கட்சியின் அரசியல் திசையை நிர்ணயிக்கும் முக்கிய மேடையாகவும், தொண்டர்களை ஒருங்கிணைக்கும் பெரிய சக்தியாகவும் இருந்து வந்துள்ளன என்றால் மிகையாகாது. திமுக துவங்கப்பட்ட 1949ம் ஆண்டுக்கு பின்னர் நடத்தப்பட்டு வரும் இந்த மாநாடுகள், திமுகவின் வளர்ச்சியை வலுப்படுத்தியதுடன், அமைப்பு ரீதியான மிகப்பெரிய இடத்தை அடைவதற்கு உதவியுள்ளது. 1951ம் ஆண்டு சென்னையில் பேரறிஞர் அண்ணா தலைமயில் முதல் மாநில மாநாடு நடந்தது.

அதில், கட்சியின் கொள்கைகள், அமைப்பு விரிவாக்கம் மற்றும் சமூகநீதி அடிப்படையிலான அரசியல் நோக்கங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன. இதையடுத்து 1956ம் ஆண்டு திருச்சியில் நடந்த இரண்டாவது மாநில மாநாடு திமுகவுக்கு மிகப்பெரும் திருப்புமுனையை அளித்தது. அதில் தான், 1957ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் போட்டியிட வேண்டுமா? வேண்டாமா? என்பது குறித்து தொண்டர்களிடம் நேரடி வாக் கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் 56,942 தொண்டர்கள் ஆதரவாகவும், 4,203 பேர் எதிராகவும் வாக்களித்தனர். இதன் மூலம் திமுக தேர்தலில் நேரடியாக களம் காணும் முக்கிய முடிவு எடுக்கப்பட்டது. இந்த முடிவுதான் பின்னர் தமிழ்நாடு அரசியலில் திராவிட இயக்கத்தின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் வழிவகுத்தது.

அடுத்து 1961ம் ஆண்டு மதுரையில் அண்ணா தலைமையில் மூன்றாவது மாநில மாநாடு நடந்தது. இந்த மாநாட்டில் கட்சியின் சமூக நீதி, மொழி உரிமை மற்றும் மாநில உரிமைகள் குறித்த தீர்மானங்கள் வலியுறுத்தப்பட்டன. 1966ம் ஆண்டு சென்னை நகரில் நடந்த நான்காவது மாநில மாநாடு, 1967 சட்டமன்றத் தேர்தலுக்கான அரசியல் திட்டங்களை வகுக்கும் முக்கிய களமாக காணப்பட்டது. அந்த மாநாட்டை தொடர்ந்து நடந்த தேர்தலில் தான் திமுக தலைமையிலான கூட்டணி மாபெரும் வெற்றி பெற்று, முதன் முறையாக தமிழ்நாட்டில் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தது. 1975ம் ஆண்டு கோவையில் நடந்தது 5வது மாநில மாநாடு. அப்போது முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதி தலைமையில் இந்த மாநாடு நடந்தது.

அதில், சட்டமன்றத் தேர்தலுக்கான அரசியல் வலிமையை வெளிப்படுத்துவதற்கான நிகழ்வாக அனைவராலும் பார்க்கப்பட்டது. 1990ம் ஆண்டு பிப்ரவரி 9, 10, 11 ஆகிய நாட்களில் திருச்சியில் நடந்த ஆறாவது மாநில மாநாடு, அன்றைய அரசியல் சூழ்நிலையிலும், எதிர்க்கட்சி காலத்திலும் கட்சியின் அமைப்பை வலுப்படுத்த முக்கியமானதாக இருந்தது. தொடர்ந்து 1993ம் ஆண்டு கோவையில் நடந்த 7வது மாநில மாநாடு, திமுகவின் கொங்கு மண்டல அளவிலான வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது. 1996ம் ஆண்டு திருச்சியில் கலைஞர் தலைமையில் நடந்த 8வது மாநில மாநாடு தேசிய மற்றும் மாநில அரசியல் பரிமாற்றங்களின் சூழலில் நடந்தது எனலாம். 1990ம் ஆண்டு களின் தொடக்கத்தில் இந்திய அரசியலில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்கள், கூட்டணி அரசியல் வளர்ச்சி போன்ற அம்சங்கள் அந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டன.

அதன் பின்னர் 2006ம் ஆண்டு மீண்டும் திருச்சியில் கலைஞர் தலைமையில் 9வது மாநில மாநாடு 1996ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலுக்கு முன் நடந்த முக்கிய அரசியல் நிகழ்வுக்கான மாநாடு என கூறலாம். அந்த தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணி 173 இடங்களில் வெற்றி பெற்று தமிழ்நாட்டில் ஆட்சியை அமைத்தது. 2014ம் ஆண்டு திருச்சியில் கலைஞர் தலைமையில் நடந்த 10வது மாநில மாநாடு சமூகநலத்திட்டங்கள், ஏழை, எளிய மக்களுக்கான நலவாழ்வு திட்டங்கள் மற்றும் தேர்தல் வாக்குறுதிகளை ஆகியவற்றை மையப்படுத்தியது. அந்த மாநாட்டில் அறிவிக்கப்பட்ட பல திட்டங்கள் பின்னர் அரசியல் பிரச்சாரத்தின் முக்கிய தேர்தல் வாக்குறுதிகளாயின.

அதன் பின்னர் நடந்த சட்டமன்ற தேர்தலில் திமுக மீண்டும் ஆட்சியை அமைத்தது. திருச்சியில் நடத்தப்படும் மாநாடுகளுக்கு பின்னர் கட்சி பல்வேறு வகையிலும் உயர்வை எட்டியது. கட்சி தொண்டர்களை ஒருங்கிணைப்பது உட்பட பல்வேறு வகையிலும் திருச்சி வசதியாக இருந்ததை தொடர்ந்து திருச்சியில் மாநாடு என்பது திமுக-வின் இயல்பானது. மீண்டும் 2021ம் ஆண்டு திருச்சியில் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த 11வது மாநில மாநாடு மத்திய அரசியல் சூழ்நிலையை விமர்சித்தும், கட்சி அமைப்பை மறுசீரமைக்கவும் பயன்படுத்தப்பட்டது. இந்த மாநாட்டில் கட்சியின் எதிர்கால அரசியல் திட்டங்கள் மற்றும் தொண்டர் படையை விரிவுபடுத்துவது, இயக்கத்தை வலுப்படுத்துவது என்பன உள்ளிட்ட முயற்சிகள் குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்நிலையில் தான் தற்போது, 2026ம் ஆண்டு வரும் 9ம் தேதி திருச்சி சிறுகனூரில் 12வது மாநில மாநாடு நடத்த திமுக முடிவு செய்து பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற இருக்கும் இந்த மாநாட்டில் மாநிலம் முழுவதும் இருந்து 10 லட்சம் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரண்டு வருவார்கள் என எதிர்பாக்கப்படுகிறது. முதல்வர் மு.க. ஸ்டாலின் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார். மாநாட்டுப் பணிகளை பார்வையிட்ட அமைச்சர் கே.என்.நேரு இதுகுறித்து கூறுகையில், கடந்த தேர்தலின் போது இதே இடத்தில் மகளிர் உரிமைத்தொகை போன்ற 7 வாக்குறுதிகளை முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.

அது மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது. அதே போன்று இந்த மாநாட்டில் பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிடுவார் என எதிர்பார்க்கிறோம் என்றார். இதுவரை திருச்சியில் நடந்தேறிய மாநாடுகள் திமுக-விற்கு பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியதாகவும், திமுக வரலாற்றின் ஒரு பெரும் நிகழ்வாக இருந்தது குறிப்பிடத்தக்கது. அதேபோல், நாளை மறுதினம் நடைபெறும் மாநாடும் திராவிட மாடல் அரசின் 2.0 ஆட்சிக்கு கட்டியம் கூறுவதாக அமையும் என்றே அரசியல் நோக்கர்கள் அடித்து கூறுகின்றனர்.

திமுக இதுவரை நடத்தியுள்ள 11 மாநாடுகளில் 6 திருச்சியில் தான் நடந்துள்ளது. இப்போது 12வது மாநாடும் திருச்சியில் நடக்கிறது. திருச்சியை தீரர்கள் கோட்டம் என்று அண்ணா அழைத்தார். முன்னால் முதல்வர் கலைஞர் திருச்சியில் தண்டவாளத்தில் தலை வைத்து படுத்து போராட்டம் நடத்தினார். திமுகவின் பல போராட்டங்களுக்கு திருச்சி அடித்தளமாய் இருந்துள்ளது. திமுகவின் மாநாடுகளுக்கு இது ஒரு காரணமாக இருந்தாலும், தமிழகத்தின் மைய பகுதியாக திருச்சி உள்ளது. தமிழகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் 5 மணி நேர பயணத்தில் திருச்சிக்கு வந்து விடலாம். இதுவும் திருச்சியில் தொடர் மாநாடு நடத்த காரணமாகும்.

## சிலிண்டருக்கு ரூ.100 மானியம் வாக்குறுதியை

# 5 ஆண்டு கடந்தும் நிறைவேற்றவில்லை: அண்ணாமலை



சென்னை, மார்ச்.8: ‘திமுக தனது கடந்த 2021 தேர்தல் வாக் குறுதி எண் 503ல், சிலிண் டருக்கு ரூ.100 மானியம் வழங்குவோம் என்று வாக்கு றுதி கொடுத்தது. ஆனால், ஐந்து ஆண்டுகளைக் கடந் தும், இன்னும் அதனை நிறைவேற்றவில்லை’ என தமிழக பாஜகவின் முன்னாள் தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘நாடு முழுவதும், கடந்த 10 ஆண்டுகளில், சமையல் எரிவாயு பயன்பாடு, 45% அதிகரித்துள்ளது. பாரதப் பிரதமர் மோடி கொண்டு வந்த உஜ்வாலா இலவச சமையல் எரிவாயு திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்களால், கடந்த 10 ஆண்டுகளில், சமையல் எரிவாயு இணைப்பு, 14 கோடி வீடுகளில் இருந்து, சுமார் 100 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்து, 33 கோடிக்கும் அதிகமான வீடுகளில் இன்று சமையல் எரிவாயு இணைப்பு உள்ளது.

பயன்பாடு அதிகரித்ததன் காரணமாக, சமையல் எரிவாயு இறக்குமதியும் அதிகரித்திருக்கிறது. மொத்த பயன்பாட்டில், இறக்குமதி மட்டுமே 60% ஆக உள்ளது. இதனால், சர்வதேச சந்தையில், போர் உள்ளிட்ட காரணங்களால் விலை உயர்வு ஏற்படும்போது, நமது நாட்டிலும் விலை உயர்வு தவிர்க்க வியலாமல் போகிறது.

திமுக தனது கடந்த 2021 தேர்தல் வாக்குறுதி எண் 503ல், சிலிண்டருக்கு ரூ.100 மானியம் வழங்குவோம் என்று வாக்குறுதி கொடுத்தது.

ஆனால், ஐந்து ஆண்டுகளைக் கடந்தும், இன்னும் அதனை நிறைவேற்றவில்லை. பொய்யான வாக்குறுதிகள் கொடுத்து மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் திமுக, தற்போதாவது, சிலிண்டருக்கு ரூ.100 மானியத்தை அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்’ எனத் தெரிவித்தார்.

# பெட்ரோல், டீசல் விலை அதிகரிக்காது: மத்திய அரசு

சென்னை, மார்ச்.8: நாட்டில் பெட்ரோல், டீசல் விலைகள் அதிகரிக்காது என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக ANI செய்தி வெளியிட்டுள்ளது. கச்சா எண்ணெய் இறக்குமதியை அதிகரித்துள்ளதாகவும், போதுமான எண்ணெய் இருப்பு உள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், காங்கிரஸின் குற்றச்சாட்டு முற்றிலும் ஆதாரமற்றது என்றும் பெட்ரோல், டீசல் விலைகள் அதிகரிக்காது என் றும் உறுதியாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுவை நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் அறிமுகம்

# இலவசங்களை அறிவிப்பது வளர்ச்சி அல்ல; கவர்ச்சி திட்டம்: சீமான் கருத்து



புதுச்சேரி, மார்ச்.8: புதுச்சேரி நாம் தமிழர் கட்சியின் அரசியல் மாநாடு மற்றும் தேர்தல் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

கூட்டத்தில் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கொடியை ஏற்றி வைத்து பேசியதாவது: இது வரை புதுச்சேரி, தமிழகத்தில் இருக்கின்ற அரசியல் கோட்பாடு, நிலைபாட்டில் முற்றிலுமாக எங்கள் கட்சி தத்துவமும், கோட்பாடும் மாறுகிறது. இவர்கள் ஊழல், லஞ்சம். நாங்கள் உண்மை, நேர்மை.

நாங்கள் மக்களின் வாழ்க்கையைப் பற்றி கவலைப்படுவோம். அவர் கள் ஓட்டை பற்றியே கவலைபடுவார்கள், நாங்கள் நாட்டை பற்றி கவலைப்படுவோம்.

எல்லா வற்றுக்கும் இலவசம் அறிவிக்கிறார்கள். இலவசம் என்பது வளர்ச்சித் திட்டம் அல்ல. அது வீழ்ச்சி திட்டம். கவர்ச்சி திட்டம். இலவசம் பெறவேண்டிய ஏழ்மை, வறுமை இல்லாமல் எமது மக்களை உயர்த்த வேண்டும் என்பது எமது கடமை.

படித்தவர், படிக்காதவர் அனைவருக்கும் அரசு வேலை. படிக்காதவரே இல்லை என்ற நிலையை உருவாக்குவதே இலக்கு. ஆணும், பெண்ணும் சமம். இந்திய கட்சிகளின் மும்மொழிக்கொள்கை மோசடி கொள்கை. இருமொழி கொள்கை ஏமாற்றுக் கொள்கை. கொள்கை மொழி தமிழ். தமிழ் பயிற்று மொழி. ஆங்கிலம் கட்டாய பாடமொழி. பயன்பாட்டு, தொடர்பு மொழி. இது தான் எங்கள் கோட்பாடு.

இதுவரை இந்த மாநிலத்தில் இருந்த அரசியல் அடித்தளத்தை நாம் தமிழ் கட்சியின் கோட்பாடும், தத்துவமும் தகர்க்கிறது. ஆள்மாற்றம், ஆட்சி மாற் றம் தொடர்ந்து நடக்கிறது. விடுதலை பெற்ற இந்தியாவில் பல ஆண்டுகளாக ஆள் மாற்றம், ஆட்சி மாற்றம் தொடர்கிறது. ஆள் மாற்றம், ஆட்சி மாற்றம் அல்ல. அடிப்படை அமைப்பு அரசியல் மாற்றமே எங்கள் கோட்பாடு. இவ்வாறு சீமான் பேசினார்.




Owned, Printer and Published by G.SASIREKA from No: 64/80, Vivehananda Colony, Vadapalani, Chennai - 26, Printing at Annai Abirami Achagam, No: 24, Venguchetty Street, Poonga Nagar, Chennai - 3. Editor: V.S.N.SHARMA.